**இரத்மலானை/ மொறட்டுவ மற்றும் ஜா - எல /ஏக்கல கழிவுநீர் அகற்றல் செயற்திட்டம் - 2015**

இரத்மலானை/ மொறட்டுவ மற்றும் ஜா - எல /ஏக்கல கழிவுநீர் அகற்றல் செயற்திட்டத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை அரசாங்கத்திற்கும் சுவேடிஸ் சர்வதேச அபிவிருத்தி ஒத்துழைப்பு முகவரிற்கும் (எஸ்ஐடிசீஏ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2006 மார்ச் 02 ஆம் திகதிய 71001436 ஆம் இலக்க குறித்துரைக்கப்பட்ட உடன்படிக்கையின் 11 ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் குறித்துரைக்கப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாகவிருந்த, தற்போதைய நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. சுற்றாடலிற்கோ அல்லது மக்களுக்கோ தீங்கில்லாதிருக்கின்ற அத்தகைய வழியில் சுத்திகரித்த கழிவுநீர் மற்றும் சாக்கடை அகற்றலுடன் மத்திய நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியில் கைத்தொழில் மற்றும் வீட்டுக் கழிவுநீர்ச் சுத்திகரிப்பு என்பவற்றின் முறையான சேகரிப்புடன் இரத்மலானை/ மொறட்டுவ மற்றும் ஜா-எல/ ஏக்கல ஆகிய இரண்டு பகுதிகளில் சூழல் மாசடைதல் முகாமைத்துவத்தை உறுதிப்படுத்துவதே செயற்திட்டத்தின் பிரதான குறிக்கோளாக உள்ளது. உணர்வுபூர்வமான சுற்றாடல் முறைமையிலுள்ள சுற்றாடல் நிலையில் முன்னேற்றமடைந்த பகுதிகளிலுள்ள மக்களிற்கான சுகாதாரம் மற்றும் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கு பங்களிப்புச் செய்வதும் இரத்மலானை/ மொறட்டுவ மற்றும் ஜா-எல/ ஏக்கல பிரதேசங்களில் வடிகாலமைப்பு வலையமைப்புக்கள் மற்றும் சுத்திகரித்தல் வசதிகளின் ஏற்பாடுகள் ஊடாக கொழும்பைச் சுற்றியுள்ள கைத்தொழில் பகுதிகளின் நிலைபேறான அபிவிருத்தியை நிறுவுதலும் செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த நீண்டகால குறிக்கோள்களாகும். குறித்துரைக்கப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 12,135 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 120.02 மில்லியனானதுடன் அதில் ரூபா 9,058 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 91.92 மில்லியன் கடனாகவும் ரூபா 474 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 4.14 மில்லியன் மானியமாகவும் சுவேடிஸ் சர்வதேச அபிவிருத்தி ஒத்துழைப்பு முகவரால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. பின்னர், செயற்திட்டத்தின் மொத்தக் கிரயம் ரூபா 17,471 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 148.91 மில்லியன் வரை திருத்தப்பட்டதுடன் அதில் ரூபா 11,315 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 95.06 மில்லியன் கடனாகவும் ரூபா 1,034 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 8.99 மில்லியன் மானியமாகவும் சுவேடிஸ் சர்வதேச அபிவிருத்தி ஒத்துழைப்பு முகவரால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2008 பெப்ரவரி 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2013 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென்று பட்டியலிட்டிருந்தது. பின்னர், செயற்திட்டத்தின் காலப்பகுதி 2016 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும்

நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றுக்கிணங்க திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீகரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் மற்றும் மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணுதல் என்பவற்றை தொடர்ச்சியான அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடன் மற்றும் மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டு இருந்தனவா என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கு இணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஏ) கடன் மற்றும் மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும் இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) குறித்துரைக்கப்பட்ட உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கான ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கைகொள்ள முடிந்திருந்ததென்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(உ) குறித்துரைக்கப்பட்ட உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் 31 வரை செலுத்தப்பட்ட ரூபா 1,440.30 மில்லியன் கூட்டுத்தொகையான பெறுமதி சேர் வரி நடைபெறும் வேலைகளின் கீழ் காட்டுவதற்குப் பதிலாக அரசாங்க பங்களிப்புக்களின் பெறுகைகளிற்கு எதிராக சரிசெய்யப்பட்டிருந்தது. இதன் விளைவால், நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட அரசாங்க பங்களிப்புக்கள் மற்றும் நடைபெறும் வேலைகள் என்பன அதே தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது ஒப்பந்தகாரரிடமிருந்து செயற்திட்டத்தால் அறவிடப்பட்ட ரூபா 1.17 மில்லியன் தொகையான தாமதக் கட்டணங்கள் மூலதன நடைபெறும் வேலைகளிலிருந்து கழிக்கப்பட்டிருந்தது. இதன் விளைவால், நிதிக்கூற்றுக்களில்

காட்டப்பட்ட செய்யப்பட்ட வேலைகளின் பெறுமதி அதே தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.

(இ) இலங்கை அரசாங்கத்தால் கடனளிக்கும் முகவருக்கு நேரடியாக செலுத்தப்பட்ட ரூபா 71.8 மில்லியன் கூட்டுத்தொகையான கடப்பாட்டுக் கட்டணங்கள், முகாமைத்துவ மற்றும் நிர்வாக கட்டணங்கள் போன்றன கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த நிலையான சொத்துக்கள் தொர்பாக பேரேட்டுக் கணக்குகளில் அவசியமான கணக்கீட்டுச் சீராக்கல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. ஆகவே, நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 114.21 மில்லியன் கூட்டுத்தொகையான இறையிலி காணிகள் மற்றும் ரூபா 214.14 மில்லியன் கூட்டுத்தொகையான ஏனைய சொத்துக்கள் என்பன நிலையான சொத்துப் பதிவேடு மற்றும் பௌதீக மெய்மையாய்வு அறிக்கைகளில் காட்டப்பட்ட முறையே நேரொத்த ரூபா 44.35 மில்லியன் மற்றும் ரூபா 15.68 மில்லியன் தொகைகளுடன் உடன்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

1987 இன் 03 ஆம் இலக்க அரச ஒப்பந்த அதிகாரச்சட்டத்தின் 08 ஆம் பிரிவின் பிரகாரம், ரூபா 5 மில்லியன் பெறுமதியை விஞ்சி ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தகாரர்கள் அரச ஒப்பந்த பதிவேட்டின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். மேலும், ஒப்பந்தம் வழங்கிய பின்னர் 60 நாட்களிற்குள் உடன்படிக்கை அரச ஒப்பந்த பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும் செயற்திட்டத்துடன் ஈடுபட்டுள்ள ஒப்பந்தகாரர்கள் மேற்குறிப்பிட்ட வேண்டுகைகளுடன் இணங்கியிருக்கவில்லை.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு, மீளாய்வாண்டின் போது மற்றும் 2015 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆரம்ப ஒதுக்கீடு | | திருத்திய ஒதுக்கீடு | | | மீளாய்வாண்டின் போது | | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| **எஸ்ஜடிசீஏ** | | | | | | | | | |
| - கடன் | 91.92 | 9,058 | 95.06 | 11,315 | 694.00 | 4.59 | 633.95 | 90.28 | 10,468.83 |
| - மானியம் | 4.14 | 474 | 8.99 | 1,034 | 57.00 | 0.07 | 8.31 | 8.07 | 969.12 |
| இலங்கை அரசாங்கம் | 23.96 | 2,603 | 44.86 | 5,122 | 315.25 | 1.29 | 175.77 | 28.73 | 3,749.62 |
| **மொத்தம்** | **120.02** | **12,135** | **148.91** | **17,471** | **1,066.25** | **5.95** | **818.03** | **127.08** | **15,187.57** |

## 3.2. பௌதீக செயன்முன்னேற்றம்

செயற்திட்டத்தால் சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம், ஜா-எல/ ஏக்கல கழிவுநீர் சுத்திகரிப்பு பொறி மற்றும் குழாயிடல் நடவடிக்கைகளின் நிர்மாண வேலைகள் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. மொறட்டுவ/ இரத்மலானை கழிவுநீர் சுத்திகரிப்பு பொறி மற்றும் குழாயிடல் நடவடிக்கைகளின் நிர்மாண வேலைகள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 94.18 சதவீத செயன்முன்னேற்றத்தை காட்டியிருந்தது. மேலும், மொறட்டுவை மற்றும் இரத்மலானை பகுதிகளில் 253 கைத்தொழில் அமைவிடங்கள் மற்றும் 25,000 குடியிருப்பாளர்களிற்கு கழிவுநீர் முறைமைகளுக்கான இணைப்புக்களை வழங்குவதற்கு இலக்கிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 121 கைத்தொழில் அமைவிடங்கள் மற்றும் 15,228 குடியிருப்பாளர்களிற்கு மாத்திரம் இணைப்புக்கள் வழங்கப்பட்டிருந்தது.

## 3.3. ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2008 இல் வழங்கப்பட்ட இரத்மலானை/ மொறட்டுவ கழிவுநீர் அகற்றல் முறைமையின் ஒப்பந்தம் செயற்திட்ட அமுலாக்கல் காலப்பகுதியின் போது ஒப்பந்தகாரர் வங்கி கடனை தீர்க்க முடியாமையால் செயற்திட்டத்தால் 2013 இல் இடைநிறுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் செயற்திட்டமானது மீளாய்வாண்டின் போது ரூபா 3.55 மில்லியன் தொகையான சட்டரீதியான கட்டணங்கள் ஏற்பட்டிருந்த போதிலும் ஐ.அ.டொலர் 9.06 மில்லியன் செயலாற்றல் பிணைமுறி மற்றும் வெளிநாட்டு வர்த்தக வங்கியொன்றிடமிருந்தான ஐ.அ.டொலர் 7.96 மில்லியன் உத்தரவாதங்கள் என்பவற்றை காசாக்குவதற்கு தவறியிருந்தது. மேலும், செயற்திட்டமானது ஒப்பந்தகாரருக்கு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 6.74 மில்லியன் தொகையான மேலதிக கொடுப்பனவுகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. ஒப்பந்தகாரரால் சொத்துக்களிற்கு மேற்கொள்ளப்பட்ட சேதங்கள் மீது செயற்திட்டத்திடமிருந்து மூன்றாம் நபர்களால் ரூபா 18.39 மில்லியன் தொகை கோரப்பட்டிருந்தது என மேலும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) முதலாவது ஒப்பந்த உடன்படிக்கை இரத்து செய்யப்பட்ட பின்னர் பல குழாயிடல் வேலைகளை தவிர்த்து வேறொரு ஒப்பந்தகாரருக்கு இரத்மலானை/ மொறட்டுவ கழிவுநீர் அகற்றல் முறைமை மீது புதிய ஒப்பந்தமொன்று வழங்கப்பட்டிருந்தது. மேலும், முதலாது ஒப்பந்தகாரரால் பூர்த்தியாக்கப்பட்டிருக்காத சேதமடைந்த காற்றுப்புகும் குழாய்களின் வரைதல் வேலைகள் மற்றும் மீளப் பொருத்துதல் வேலைகள் 2015 திசெம்பர் 31 வரையிலும் புதிய ஒப்பந்தகாரராலும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 இல் ரூபா 7.37 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் வழங்கப்பட்டிருந்த தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் மத்திய செயலமர்வு மற்றும் பயிற்சி நிலையத்தில் உள்ளக கழிவகற்றல் வலையமைப்பினை வழங்கி பொருத்துதல் மற்றும் இரத்மலானையில் பொதுமக்கள் கழிவகற்றல் வலையமைப்பின் வழிமறிப்பு சாக்கடை நுழைவாயிலற்கான இணைப்புக்களை வழங்கல் என்பவற்றிற்கான ஒப்பந்தம் ரூபா 1.3 மில்லியன் தொகையான தொழிலாரம்பிப்பு முற்பணங்கள் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தொடங்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) குறித்துரைக்கப்பட்ட உடன்படிக்கையின் I ஆம் உறுப்புரையின் பிரகாரம் ஜா-எல மற்றும் ஏக்கல பகுதிகளில் சுற்றாடலிற்கோ அல்லது மக்களுக்கோ ஆபத்தல்லாத வழியில் சுத்திகரித்த தண்ணீர் மற்றும் சாக்கடை அகற்றப்பட வேண்டும். எவ்வாறாயினும், ஜா- எல/ ஏக்கல கழிவுநீர் கட்டுப்பாட்டு சுத்திகரிப்பு பொறியின் கீழ் 2016 திசெம்பர் 31 வரையும் அத்தகைய பொறிமுறை அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4. வழமைக்கு மாறான கொடுக்கல் வாங்கல்கள்

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் ஊழியர்களிற்காக சொய்சாபுர விடுதிகளின் நிர்மாணம் மற்றும் பூர்த்தியாக்கலிற்காக மடிவல இணைப்பு வீடமைப்பு திட்டத்திற்கான கழிவுநீர் சுத்திகரிப்பு மற்றும் கழிவகற்றல் முறைமையின் நிர்மாணம், வடிவமைப்பு மற்றும் கட்டிட ஒப்பந்தத்திற்காக செயற்திட்டத்தால் செலவிடப்பட்ட ரூபா 69.1 மில்லியன் தொகை செயற்திட்டத்தின் நோக்கங்களுடன் நேரடியாக தொடர்புபட்டிருக்கவில்லை.

### 3.5. நிதிக் கட்டுப்பாடு மீதான விடயங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 இல் பூர்த்தியாக்கப்பட்டிருந்த வீதி மீளமைப்பு வேலைகளிற்காக 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் வீதி அபிவிருத்தி அதிகாரசபைகளில் இடப்பட்ட ரூபா 12.98 மில்லியன் தொகையான 05 மீளளிக்கத்தக்க வைப்புக்கள் முன்னைய ஆண்டிற்கான எனது கணக்காய்வு அறிக்கையில் இது சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும், 2016 திசெம்பர் 31 வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிப்பிரமாணம் 134(3) மற்றும் நிதி அமைச்சின் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் 2010 யூலை 26 ஆந் திகதிய 05 ஆம் இலக்க சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம், செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உள்ளகக் கணக்காய்வு பிரிவால் கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.6. சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்

வழமையாக, செயற்திட்டம் அதன் நிர்வாக வேலைகளிற்காக போதிய பதவியணியினரை ஆட்சேர்ப்பு செய்திருந்த போதிலும் செயற்திட்ட பதவியணியினரின் வேதனங்களின் கணிப்பீடு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் செய்யப்படுகின்றதுடன் 20 சதவீத மேந்தலை செயற்திட்டத்திலிருந்து அறவிடப்படுகின்றது. 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு செயற்திட்டத்தால் செலுத்தப்பட்ட அவ்வாறான மேந்தலைச் செலவினம் ரூபா 253.27 மில்லியன் தொகையாகும்.